பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ சிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம். ஏ., எம்.பி.

மலர் : 15] சென்னை : ஐப்பசி 8உ (25—10—67) புதன்   வெளியூர் : ஐப்பசி 9உ (26—10—67) வியாழன் [இதழ் : 110

இந்தி வெறியர்களுக்கு எச்சரிக்கை!

" இந்தியைத் தேசிய மொழியாக்க வேண்டும்' என்ற கோரிக்கையில் முழுக்க முழுக்க அரசியலே மேலெழுந்து நிற்கிறது! நிலைமை இப்படியே நீடித்தால் தென்னிந்தியா முழுவதும் இந்தியை எதிர்த்து குரலெழுப்பப் போகிறது ?"

என்று முன்னாள் இந்தியத் தலைமை நீதிபதி கஜேந்திர கட்கார், பெங்களூரில் பேசுகையில், இந்தி வெறியர்களை எச்சரித்தார் !

முதலில் வறுமையை ஒழிப்பீர்!

மொழிப்பிரச்சினையைப் பின்னர் பார்த்துக்கொள்ளலாம்

டில்லி அரசுக்கு முதலமைச்சர் அண்ணா அறிவுரை

சென்னை, அக். 25—

" இந்திக்குத் தென்னாட்டவர் காட்டும் எதிர்ப்பு உள்ள உணர்ச்சிபூர்வமானது என்பதை மத்திய அரசு உணராதது வருந்தத்தக்கதாகும். விரும்பாத மக்களின்மீது இந்தி திணிக்கப்படாமலிருக்கும்படிப் பார்த்துக்கொள்ளத் தமிழக அரசு முழு மூச்சுடன் பாடுபடும் !

" மொழிக் கொள்கையில் மத்திய அரசின் நிலை பயனற்றதாக உள்ளது ; யார் கையாள்க்கூடாதோ அவர்களிடம் இந்தப் பிரச்சினை இதுவரை இருந்துவந்திருக்கிறது ; நாட்டின் கல்வி நிபுணர்களிடம் விடப்பட வேண்டிய பிரச்சினையாகும் இது ! கல்வித் துல[illegible]பிடம் இருக்கவேண்டிய இப்பிரச்சினை ஏன் உள்துறையிடம் இருக்கிறது என்பது [illegible]கவில்லை.

" இத்தனை [illegible]டுக்காலமாக ஆங்கிலமே ஆட்சிமொழியாகப் பயன்பட்டு வந்திருக்கிறது ; அ[illegible]த. 'அந்நிய மொழி' என்று சொல்லுவது ஒரு மாயை ஆகும் ! அப்படிப் பார்க்கப் போனால் எல்லோருடைய நடையுடை பாவனையிலோ வாழ்க்கை முறையிலோ அந்நிய முறை ஏதாவது இருப்பதைக் காணமுடியும் ! தீவிர இந்தி வெறியர்களிடையேயும் அந்நிய அம்சங்கள் இருக்கத்தான் செய்கின்றன !

" எனவே, வறுமையை ஒழிக்கும் பணியே இப்போது முதலில் கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும். இதில் தீர்வு கண்ட பிறகு மொழிப் பிரச்சினைபற்றி அமைதியாக விவாதித்து ஆவன செய்யலாம் "

என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், திட்டவட்டமாகத் தெரிவித்தார்கள். ஏ. வி. தாமஸ் நிறுவனத்தைச் சேர்ந்த திரு. பி. சீனிவாசன் நடத்திய தேநீர் விருந்தில் கலந்துகொண்டு அண்ணா அவர்கள் பேசுகையில் மொழிப் பிரச்சினை குறித்து மேலும் குறிப்பிட்டதாவது :—

" மொழி குறித்து எழுகின்ற சிக்கல்கள், மாநில அரசுக்கும்—மத்திய அரசுக்கும் மட்டுமன்றி, மாநிலத்திற்குள்ளேயும் உணர்ச்சித் தீயை எளிதில் மூட்டிடத் தக்கதாகும்; இதை உணர்ந்துதான், இம்மாநிலம் முழுதும், ஓர் அணியென இந்திக்கு, எதிராகத் திரண்டு நிற்கிறது !

இராஜாஜி, பெரியார் இராமசாமி, முன்னாள் தளபதி கரியப்பா போன்றவர்களும், ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்க வேண்டிய தன் அவசியத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள்; அவர்களையெல்லாம் பார்த்து, 'மாநிலப் பித்துக் கொண்டவர்கள்' என்றோ, 'அரசியல் அற்பத்தனம் உடையவர்கள்' என்றோ எவரும் சொல்லிவிட இயலாது.

உணவு உற்பத்தியைப் பெருக்கி—தொழில்களைப் பெருக்கி—நகரங்களை அழகு நகரங்களாக ஆக்கி—கிராமங்களை வாழ்வதற்கு ஏற்றதாக ஆக்கி இருந்திருக்க வேண்டும் ; எப்போது வேண்டுமானாலும், மொழி பற்றி விவாதித்துக் கொள்ளலாம்.

ஆங்கிலம் நம்மீது திணிக்கப்பட்ட ஒன்றல்ல ! 'இந்தியாவில் உள்ளவர்களுக்கு ஆங்கிலக் கல்வி வளர வேண்டும்' என்று இந்த நாட்டில் இயக்கமே நடத்தியிருக்கிறார்கள் ! அப்படி, நாமாகக் கேட்டுப் பெற்றதுதான் ஆங்கிலம் !

ஆங்கில மொழியின் பயனை இன்று நாம் மட்டுமல்லாமல் உலகில் பல நாடுகளும் பெற்றுள்ளன ! இதையெல்லாம் மனதிற் கொண்டு, தமிழக அரசு தன்னுடைய கொள்கையை விளக்கித் தெரிவித்துள்ளது-"

இடம்— பொருள்— ஏவல்!

ஆந்திரப் பிரதேச சமுதாய நல அமைச்சர் ஏ. இராமசாமி விசாகப்பட்டினத்தில், இடம்—பொருள்—ஏவல் என்ற இலக்கணத்தைத் தகர்த்தெறிந்து' ஒரு சாதனையைத் தோற்றுவித்துள்ளார் !

மாவட்ட காங்கிரசின் சார்பில் நடைபெற்ற கூட்டம் ஒன்றினை துவக்கிப் பேச வேண்டிய அவர், அங்கே அரிசன மக்களின் பிரச்சினைகளைப் பற்றி ஆராய முற்பட்டார்.

நிகழ்ச்சிக்குத் தலைமைதாங்கிய ஆந்திரப் பிரதேசக் காங்கிரசுத் தலைவர், 'அரிசன மக்களைப் பற்றி நீங்கள் அடுத்து வரப்போகும் கூட்டத்தில பேச வேண்டும்; இது காங்கிரசுக் கட்சி அளவில் நடைபெறும் நிகழ்ச்சி' என நினைவுபடுத்தியிருக்கிறார் !

பதிலுக்கு—சமாளிக்கும் பாவனையில்—அந்த அமைச்சர் பேசியதாவது :—

" நல்லது; இங்கோ அல்லது எங்கோ இதையேதான் நான் திரும்பத் திரும்பப் பேச வேண்டியிருக்கிறது ; எனவே இது ஒரு பெரிய வேறுபாடு அல்ல !"

அந்நிய உதவியில் அரசியல் கலக்கிறது

கேரள அமைச்சரவையில் கருத்துக் குழப்பம்

கோழிக்கோடு பகுதியில் உள்ள இரும்புச் சுரங்க அமைப்பு வேலைகளுக்காக ஜப்பான் நாட்டு உதவியைப் பெறுவதில், கேரள கூட்டணி அமைச்சரவையில் உள்ள இரண்டு கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கிடையே எதிர்ப்பு தோன்றியுள்ளது.

" வலதுசாரி கம்யூனிஸ்டு அமைச்சரான டி. வி. தாமஸ், ஜப்பானுக்குச் சென்று பேசி முடித்து வந்துள்ள அந்நிய ஒத்துழைப்பு, இடதுசாரிக் கம்யூனிஸ்டுக் கட்சியின் எதிர்ப்பினால் பயன்படாமல் போய்விடக்கூடும்" என்ற நிலை எழுந்துள்ளதாகத் தெரிகிறது.

மார்க்சீயக் கம்யூனிஸ்டுச் செயலாளர், இத்தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையில்,

" அந்நிய உதவி—அதுவும் முதலாளித்துவ நாடுகளிலிருந்து—பெறுவதை நாங்கள் எதிர்க்கிறோம் ; இந்தியப் பொருளாதாரத்தை இது பெரிதும் பாதிப்பதுடன், இத்தகைய ஒரு போக்கு காங்கிரசு நிர்வாகத்தின் தொடர்ச்சியாகத்தான் இருக்கும் என நம்புகிறோம் "

என்று கூறியுள்ளார்.

'முரசொலி' அலுவலகம் தாக்கப்பட்ட வழக்கு

நவ. 10-க்கு ஒத்திவைப்பு

சென்னை, அக். 24—

விடுதலைநாள் விழாவன்று, 'முரசொலி' அலுவலகம் மீது தாக்குதல் நடத்தியதாகவும் கலவரம் செய்யப்பட்டதாகவும் காங்கிரசுக்காரர்களான கோடம்பாக்கம் அய்யாவு உள்ளிட்ட 15 பேர்மீது தொடரப்பட்ட வழக்கு விசாரணை, 7-வது மாகாண மாஜிஸ்திரேட் நீதிமன்றத்திலிருந்து 5-வது மாகாண மாஜிஸ்திரேட் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, வழக்கு விசாரணை நவ. 10-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

சென்னை மாநகராட்சி

உறுப்பினர் பதவிக்காலம் நீடிப்பு

சென்னை, அக் 24—

சென்னை மாநகராட்சி உறுப்பினர்களின் பதவிக் காலம் 1967 நவம்பர் முதல் நாளிலிருந்து 1968 மே முதல் நாள் வரை நீடிக்கப் பட்டுள்ளது.

இத்தகவலை, அமைச்சர் மா. முத்துச்சாமி செய்தியாளர்களிடம் கூறினார்.

படி அரிசி...

திட்டத்தைக் குலைக்கக் காமராசரின் சதி!

"படி அரிசித் திட்டத்தின்மீது காமராசருக்குக் கடுங்கோபம் ஏற்பட்டிருக்கிறது ; எனவேதான், இந்தத் திட்டத்தைக் கெடுக்க—பாழ்படுத்த, காமராசர் உறுதிகொண்டிருக்கிறார் !

"அந்த உறுதி அவர் மனதிலே இருப்பதால்தான், விவசாயிகளைப் பார்த்து, 'கொள்முதல் விலையை அதிகரிக்கும்படி கேளுங்கள்' என்று கூறுகிறார் ; 'கொள்முதல் விலையை அதிகப்படுத்தாவிட்டால், கறுப்புச் சின்னம் அணிந்து போராடுங்கள் ; கலெக்டர் ஆபீசு முன் அட்டை ஏந்திப் போராடுங்கள் ; உங்களால் முடியாவிட்டால் நானும் போராட வருகிறேன்' என்று கூறுகிறார் !

" 'விவசாயிகளுக்குக் கொள்முதல் விலையை அதிகரித்[illegible]படி அரிசித் திட்டத்தைத் தொடர்ந்து அமுல்ப[illegible] இதை விட்டுவிட்டு ஓடிவிடுவார்கள் ; அ[illegible] வைத்து மக்களிடம், 'பார் பார்; படி அரிசி போடாமல் [illegible]விட்டார்கள்' என்று பிரச்சாரம் செய்யலாம்' என்று காமராச[illegible]னைக்கிறார் ! எனவேதான் அவர், 'கொள்முதல் விலையைக் கூ[illegible]வதற்குப் போராடுவேன்' என்கிறார் !

"கொள்முதல் விலை என்பது, நாங்கள் நிர்ணயிப்ப[illegible]ல்ல ! அரசாங்க அதிகாரிகளும், நிலச்சுவான்தார்களும், [illegible]வசாயிகளும் கோட்டையில் கூடி முடிவெடுத்ததற்கு ஏ[illegible]தான் அந்த விலை நிர்ணயிக்கப்படுகிறது !

"இப்போது நெல்லுக்குக் கொடுக்கும் கொள்முதல் [illegible]லையை நாங்கள் நிர்ணயிக்கவில்லை—பக்தவத்சலம் அரசாங்[illegible]தான் அதை நிர்ணயித்தது ! அவர்கள் நிர்ணயித்த விலை[illegible] நாங்கள் கொடுத்தால், அதைக் காங்கிரசாரே குற்றம் செ[illegible]ல்வது எப்படி நியாயம் ?"

—அறிஞர் அண்ணா

[இராயப்பேட்டைக் கூட்டத்தில்]

காதால் கேட்டது!

பத்திரிகை [illegible]—

" [illegible]ள்,

வாக்குறுதி[illegible]

வீசுவதில் மன்[illegible]தி ம[illegible]

னர்கள் ...!"

அருகில் இருந்தவர் :—

" இப்படிப் பேசியிருப்பது யாரு ?"

பத்திரிகை படிப்பவர் :—

" காமராசர் !"

அருகில் இருந்தவர் :—

" ஓகோ ! இவரும் ஒரு ராசாதானா !"

'கொள்முதல் விலை போதுமானதே'

ரிசர்வ் பாங்கி கவர்னர் கருத்து

" சென்ற ஆண்டு நிர்ணயிக்கப்பட்டுள்ள தானியக் கொள்முதல் விலை நியாயமானதாகும் ; அதுவே இந்த ஆண்டும் தொடரலாம் ; 'போதுமானதல்ல' என்பது சரியல்ல "

என்று இந்திய ரிசர்வ் பாங்கியின் புதிய கவர்னர் எல். கே. ஜா, நேற்று 'ரோடரி கிளப்' நிகழ்ச்சியில் குறிப்பிட்டுள்ளார்.

" சென்ற ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட விலைதான் இந்த ஆண்டின் அதிக விளைச்சலுக்குக் காரணமாகும் ; 'கொள்முதல் விலை போதுமானது' என்ற உணர்வுதான், உழவர்களை இத்தடவை அதிக உற்பத்திக்கு உற்சாகமூட்டியிருக்கிறது ; இந்த நிலையில், இப்போது, 'கொள்முதல் விலையைக் கூட்டவேண்டும்' என்று கூறுவது என்னால் ஏற்கமுடியவில்லை "

என்று கூறிய ஜா,

" கொள்முதல் விலை, மற்ற பொருளாதாரக் கூறுகளைப் பாதிக்காத அளவில் இருக்க வேண்டும் "

என்ற எச்சரிக்கையையும் 'கொள்முதல் விலையைக் கூட்டவேண்டும்' என்று கூறி வருபவர்களுக்குப் பதிலளிக்கும் வகையில் தெரிவித்தார்.

'தானியக் கொள்முதல் விலை அதிகரிக்கப்பட வேண்டும்' என, காங்கிரசுத் தலைவர் சில நாட்களாகப் பேசிவருவது இங்கு நினைவு கூரத்தக்கது.

காலவரையறையின்றி ஆங்கிலம் நீடிக்க ஆதரவு

கிழக்கு மாநிலங்கள் நிலைமை

அசாமிய மலைகள் உட்படப் பெரும்பாலான கிழக்கு மாநிலங்கள், காலவரையறையின்றி ஆங்கிலம் நீடிப்பதை ஆதரிக்கின்றன.

சான்ருக, நாகாலாந்து அரசு ஆங்கிலத்தை ஆட்சி மொழியாகவும், பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பயிற்று மொழியாகவும் நீடிக்க முடிவு செய்துவிட்டது.

அரசியல் சட்டத்தின் எட்டாவது பிரிவில் ஆங்கில மொழியையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று நாகாலாந்துச் சட்டமன்றம் ஒருமனதாகச் சிபாரிசும் செய்திருக்கிறது.

நாகாலாந்தில் சுமார் 3,69,000 பேர் வாழ்கின்றனர்; வெவ்வேறுபட்ட 14 மொழிகளைப் பேசுகின்றனர். 'நாகம்' பொது மொழியாக இருப்பினும் இது, நாக, அசாமிய, வங்க, இந்தி மொழிகளின் கலவையாகும்—அதை ஆட்சி மொழியாக்குவதற்கு எப்போதும் கடுமையான எதிர்ப்பு இருந்து வருகிறது.

இந்தியாவில் ஆங்கிலத்தை ஆட்சி மொழியாக ஏற்றுக்கொண்ட முதல் மாநிலமாக நாகாலாந்து விளங்குகிறது. ஆங்கிலம் இம்மாநிலத்தின் ஆட்சி மொழியாக 1964-ம் ஆண்டு அறிவிக்கப்பட்டது.

மலைப் பகுதிகளனைத்தும் ஆங்கிலத்தை ஆதரிக்கின்றன; ஏனெனில், அப்பகுதி மக்கள் பேசும் கிளைமொழிகளில் எதுவும், ஒரு வட்டார மொழிக்குரிய தரத்தை அடைந்திருக்கவில்லை.

மலை மாநிலம் உருவாகுமாயின், அதுவும் ஆங்கிலத்தை ஆட்சி மொழியாகவும், கல்விக்கூடங்களில் பயிற்று மொழியாகவும் வைத்துக்கொள்ளுமென்று மலை மாநிலம் வேண்டும் !இயக்கத்தவர் கூறுகின்றனர்.

கௌகாத்தி, திப்ருகட் பல்கலைக் கழகங்கள், அறிவுத் தேட்டத்திற்காகவும், இந்தியாவிலும் அயலிலும் ஆராய்ச்சி மேற்கொள்வதற்காகவும் இப்போதைக்கு ஆங்கிலத்தையே நீடிக்கும்.

நேபாவும் ஆங்கிலத்தைக் காலவரையறையின்றி நீடிக்க முடிவு செய்துவிட்டது.

கொசு ஒழிப்புப் போர்

விஞ்ஞானிகள் முயற்சி

கொசுக்களை அடியோடு ஒழிக்கும் முழுமூச்சுப் போர் ஒன்றில் அமெரிக்க விஞ்ஞானிகள் ஈடுபட்டிருக்கின்றனர். இந்தத் திட்டத்துக்கு 20,005 டாலர் மானியம் வழங்கப்பட்டிருக்கிறது.

உலகில் நோய்களைப் பரப்புவதற்கு முன்னணியில் முதலாவது இடம் பெற்றிருப்பது கொசு.

வானொலி---சென்னையிலும் பிரச்சினையாகிறதா?

1967-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலுக்குப் பின்னர், வங்காளத்திலும் மைசூரிலும், மத்திய–மாநில அரசுகளிடையே புதிய பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ள அனைத்திந்திய வானொலி, சென்னையை மட்டும் விதிவிலக்காக விட்டுவைக்க விரும்பவில்லை போலிருக்கிறது!

வளர்ந்துள்ள—மாறியுள்ள சூழ்நிலைகளைப் புரிந்துகொண்டு, எல்லாத் தரப்பினரிடையேயும் ஒருமித்த ஒப்புதலையும்—பாராட்டுதலையும் பெறவேண்டிய அதன் நிகழ்ச்சிகளில், 'அரசியல் பூச்சு' தலைதூக்குவது கூடாது–தேவையில்லை! அதிலும் குறிப்பாக, அரசியலுக்கு அவசியமே இல்லாத நாடகம்–பாடல்–கதை நிகழ்ச்சிகளில், 'அரசியல்' அவசியமே இல்லை!

கடந்த சனியன்று, திரு. மாயாவி என்பவர் எழுதித் தயாரித்து—சென்னை-ஏ வானொலி நிலையத்திலிருந்து இரவு 8 மணிமுதல் 9 மணிவரை ஒலிபரப்பான, 'எதிர்வினை' என்ற நாடகம், 'அனைத்திந்திய வானொலி மூன்ருவதாக சென்னையிலும் பிரச்சினையைத் தோற்றுவிக்கிறதோ' என்று சந்தேகிக்க இடம் கொடுத்துள்ளது!

நாடகத்தின் கதை, 1947 சுதந்தரப் போராட்டத்தைப் பற்றியது!

விடுதலைக்குப் பின் நடக்கும் முதல் பாராளுமன்றத் தேர்தலில், 'நடராச பிள்ளை' என்பவர் நிற்கிருர்! அதற்கான மேடைப் பிரச்சாரமும் நடக்கிறது!

"சுதந்தரத்துக்காகப் பாடுபட்ட நடராச பிள்ளைக்கு வாக்களித்து, பெற்ற சுதந்தரத்தைக் காப்பாற்றுவோம்!"

"சுதந்தரத்துக்காகப் பாடுபட்டவருக்குத்தான் அதைக் கட்டிக்காக்கும் அருமை தெரியும்; எனவே, வேறு யாருக்கும் உங்கள் ஆதரவு இருக்கக்கூடாது!"

"இரத்தம் சிந்திப் பாடுபட்ட பரம்பரையைச் சார்ந்தவருக்கே உங்கள் ஓட்டுகளை அளியுங்கள்!"

என்ற கருத்தில், நடராச பிள்ளை என்பவருக்காக ஆதரவு திரட்டப்படுகிறது—நாடகத்தில்!

'நடராச பிள்ளை, காங்கிரசு வேட்பாளர்' என்று வார்த்தைகளால் அறிமுகப்படுத்தப்படவில்லையே தவிர, **'உண்மைப் பொருள் அதுதான்—உள்ளடக்கம் அதுதான்'** என்று கேட்பவர் உணரும்படியாக அந்த நிகழ்ச்சியில், பல நிமிடங்கள் பிரச்சாரம் நடக்கிறது!

மேற்கு வங்க மாநில அமைச்சரின் மே தினச் சொற்பொழிவினை அறுவைச் சிகிச்சை செய்த அனைத்திந்திய வானொலி நிலையம்—

மைசூர் தொழிலாளர் தலைவர் ஒருவரின் சொற்பொழிவு அரசியல் வர்ணத்தில் இருந்ததாக நிராகரித்த அனைத்திந்திய வானொலி நிலையம்—

சென்னையில் மட்டும்---அதுவும் நாடாளுமன்றத்துக்கான இடைத் தேர்தல் நடைபெறும் இந்த நேரத்தில், இப்படிப்பட்ட பின்னணியைக் கொண்ட நாடகத்தினைத் தேர்ந்தெடுப்பானேன்?

கதைப் பொருள் அப்படி என்றுல், அதை முழுதும் நிராகரிப்பதுதானே?

அல்லது நாடகத்தில் வரும் தேர்தல் பிரச்சார நிகழ்ச்சியை யாவது தவிர்த்திருப்பதுதானே?

மாற்றுக் கட்சி நிர்வாகம் என்ருலும், மத்திய அரசுக்கு உரிய மதிப்பினைக் கொடுத்து இந்திய அரசியலுக்கே ஓர் எடுத்துக்காட்டாக இருந்துவரும்—கழக ஆட்சி நிலவும் தமிழகத்தில், அனைத்திந்திய வானொலியின் சென்னை நிலையம் இதுபோன்ற தவறினைச் செய்திருப்பது, வருந்தத்தக்க நிலையைத்தான் தோற்றுவித்த செயலாகிறது!

★ நிகழ்ச்சியின் இடையில் உள்ள தவறினை நிலைய நிர்வாகிகள் இனியேனும் உணருகிருர்களா?

★ தவறு, தெரிந்தே நடந்ததா அல்லது அறியாமல் விளைந்ததா? —

என்பன போன்ற [illegible]விகள், நிகழ்ச்சியினைக் கேட்டவர்கள் உள்ளத்தி[illegible]ள்ளது. விளக்குவதற்கு, நிலையத்தினர் கடமைப்ப[illegible]ர்.

—எஸ். ஆர்.

(5-ம் பத்தி தொடர்ச்சி)

குள்ள தலைவர்கள்; அந்நியக் கடன்கள் அவர்களுக்குப் பிடிக்கும்; அந்நியத் தொழில் நுணுக்க அறிவு பிடிக்கும்; அந்நிய நடையுடை பாவனைகள் பிடிக்கும். மொழியைப் பற்றி வரும்போது மட்டுந்தான், அவர்கள் மாறிவிடுகிருர்கள்!

இங்கே பல்வேறு நாகரிகங்களின் சுவடுகள் பதிந்துள்ளதைக் காணலாம். ஆங்கில நாகரிகம் உட்பட பல நாகரிகங்களும் சேர்ந்து இன்றைய இந்திய நாகரிகத்தை உருவாக்கியுள்ளன!

ஒருமைப்பாடு என்பது உள்ள பூர்வமாக உருவாக வேண்டும்—மொழியால் அல்ல!

பிற மொழியினர் மீது இந்தி திணிக்கப்படுவதை உறுதியோடு எதிர்த்து வருகிருேம்! தொடர்ந்து எதிர்ப்போம்! இந்தித் திணிப்பு கைவிடப்படும் வரை ஓயமாட்டோம்!"

பக்தவத்சலம் ஆட்சியில் சட்டம்--ஒழுங்கு காத்த இலட்சணம் தெரியாதா?

"எங்கள் ஆட்சியில் சட்டம்-- ஒழுங்கு பற்றிப் பேசுகிருர்களே; அவர்கள் ஆட்சி நடத்திய வேளையில்—1965-ல் இந்தி எதிர்ப்புப் போரின்போது எங்கள் விடுகளுக்கு எதிரில் காலிகள் கும்பல் கூடிக்கொண்டு கல் எறிந்தார்களே—அப்போது சட்டம் என்ன, கொட்டியதா?

"அன்று இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் வீட்டுக்கு எதிரில் காலிகள் கூடிக்கொண்டு, கலகம் செய்தபோது, பக்தவத்சலத்துக்கு 'போன்' செய்து, 'கூட்டம் கூடி கலகம் செய்கிருர்கள்; பாதுகாப்புத் தேவை' என்றுர் எஸ். எஸ். ஆர்.; அதற்கு பக்தவத்சலம், 'போலீசுக்குப் போன் செய்யுங்கள்; என்னை ஏன் கேட்கிறீர்கள்?' என்றுர், 'போலீசுக்குப் போன் செய்தேன்; கவனிக்கவில்லை' என்றுர் எஸ். எஸ். ஆர்.; 'அவர்களுக்கு வேறு வேலை இருக்கும்' என்ற முறையில் பதில் தந்தார்—பாதுகாப்புத் தரவில்லை! இந்த நிலையில் இருந்தது--அவர்கள் சட்டமும் ஒழுங்கும்!

"அன்றையத்தினம் நான் பேசுவதாயிருந்த கூட்டத்தில் கலகம் செய்யவும், பேசுகிற என்னைத் தடுத்து நிறுத்தவும், தாக்கவும் ஆட்களை நியமித்து அறிக்கை விடுத்தார்கள். அவர்களில் யாரையும் அப்போது கைது செய்யவில்லை! என்னைத்தான் கைது செய்தார்கள்! இதுதான் அவர்கள் ஆட்சியில் சட்டமும் ஒழுங்கும்!

---அறிஞர் அண்ணு

(நுங்கம்பாக்கம் கூட்டத்தில்)

ஆதிக்க வெறியர்களின் ஆணவம் அடங்கிவருகிறது!

'மொழித் திணிப்புக் கைவிடப்படும்வரை ஓயமாட்டோம்' --- அண்ணு தெளிவுரை

சென்னை, அக். 25—

"இந்நாட்டை ஒன்றுபடுத்த இந்தி அவசியம் என்று சொல்வது அரசியல் கட்டுக்கதையாகும்.

"பல ஆண்டுகளுக்கு முன்னுல் இந்தி எதிர்ப்பு இயக்கம் துவக்கப்பட்டபோது, தேசீயத்தையும்--ஏன்--இந்தியா முழுவதையுமே எதிர்ப்பதற்குச் சமமாகக் கருதப்பட்டது; ஆனுல் இப்போது, இந்தி பேசும் பகுதிகளுக்குக் கூடச் சென்று இந்தியைத் தாராளமாக எதிர்க்க முடியும்.

"நாட்டிற்குள் பல்வேறு பகுதிகளுக்கிடையே தொடர்பு கொள்வதற்கு ஒரு மொழியும், வெளிநாடுகளுடன் தொடர்பு கொள்வதற்கு வேருெரு மொழியும் வேண்டும் என்று சொல்வது அரசியல் அதிகப்பிரசங்கித்தனமாகும்"

என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள், ஆங்கிலோ-இந்தியர் சங்கததின் 88-வது ஆண்டு விழாவுக்குத் தலைமைவகித்து உரையாற்றுகையில் குறிபபிட்டார்கள்.

எழும்பூர் ஒயிட் நினைவு மண்டபத்தில் நடைபெற்ற இம்மாநாட்டில், திரு. ஜி. வி. டி. நெட்டோ வரவேற்புரையாற்றினுர்.

திரு. ஜே. எம். நாயர் நன்றி கூறினுர்.

1966-ல் நடந்த உயர்நிலைப் பள்ளித் தேர்வில், தமிழில் அதிக மதிப்[illegible]கள் பெற்ற செல்வி எம். [illegible]ன்சிஸ் என்னும் மாண[illegible] அவர்கள், '[illegible]ரிசாக வழங்கி[illegible]

"ஆங்கிலோ-இந்தியர்கள் மிகச் சிறுபான்மையினராக இருந்தபோதிலும், அன்ருட நாட்டு நடப்புகளை நன்கு தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும்" என்று அண்ணு கேட்டுக்கொண்டார்.

அண்ணு அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இந்தித் திணிப்புக்குக் காணப்படும் எதிர்ப்பு, மொழி ஏகாதிபத்தியத்தின் திமிரைப் பெரும் அளவுக்கு ஆட்டம் காண வைத்திருக்கிறது. ஆங்கிலம் ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் மொழி என்றில்லாமல் உலக மொழியாயிருப்பதாலேயே அதை நான் ஆதரிக்கிறேன்.

ஆங்கிலத்தைத் தீவிரமாக எதிர்த்து வந்தவர்கள்கூட, இப்போது அதனைப் புறக்கணித்து விட முடியாது என்பதை ஒப்புக் கொள்கிருர்கள்.

நாட்டின் ஒற்றுமை ஒரு குறிப்பிட்ட மொழியையோ, 'எல்லாம் ஒரே மாதிரியாகத்தான் இருந்[illegible]ண்டும்' என்ற நிலை[illegible]ாறுத்ததல்ல; உணர்ச்சியைப[illegible]பொறுத்ததாகும்.

ஆங்கில [illegible] எந்த ஒரு நாட்டுக்கும் [illegible]தமானதாக இன்று இல்லை[illegible]

இரண்[illegible]து உலகப் போரின் போ[illegible] மாவீரன் சர்ச்சில், 'ஆங்[illegible] பேசுகிற மக்களே! ஒன்று[illegible]ங்கள்!' என்று அறைகூவ[illegible] விடுத்தார். அமெரிக்க நாடு அப்போதுதான் போரில் இற[illegible]யது! அப்படி ஒன்றுபடுத்[illegible]ம் ஆற்றல் ஆங்கிலத்துக்[illegible]உண்டு!

உலகின் பல நாடுகளிலும் இன்று ஆங்கிலம் கட்டாய பாடமாகச் சொல்லிக் கொடுககப்படுகிறது. வேறு பல நாடுகளில் இரண்டாவது மொழியாகக் கற்றுத்தரப் படுகிறது.

சோவியத் இரஷ்யாவில்கூட ஆங்கிலம் சிறப்பு மொழியாகக் கற்பிக்கப்படுகிறது.

நம்முடைய நாட்டிலேகூட, அந்நிய நாட்டினுடையவை என்பதற்காக எல்லாவற்றையும் வெறுப்பவர்கள் அல்லர், இங்

(2-ம் பத்தி பார்க்க)

மூலவர்களிடையே முரண்பாடு

மொரார்ஜி---தகராறு வெளிநாடுகளுக்கும் எட்டியது

நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய் வெளிநாடுகளில் சில கொள்கைகளை வெளியிட்டதும், அவை இந்தியாவின் அதிகார பூர்வமான கொள்கைகள் அல்ல என்று வெளிநாட்டுத் துறை அறிக்கை விடுத்ததும், புதுடில்லியில் புதியதொரு புயலைக் கிளப்பியுள்ளது!

'அறிவிக்கப்பட்ட கொள்கைகளிலிருந்து மொரார்ஜி தேசாய் வழுவியிருக்கக்கூடாது' என்றும், 'அவர் அப்படிச் செய்திருந்தாலும், அவரைக் கலந்து பேசாமல் வெளிநாட்டுத் துறை அறிக்கை விடுத்திருக்கக் கூடாது' என்றும் காமராசர் உள்பட பல்வேறு நாடாளுமன்ற காங்கிரசு உறுப்பினர்கள் கருதுவதாகத் தெரிகிறது.

வெளிநாட்டுத் துறை அமைச்சர் இந்திரா காந்தி மிகத் தெளிவான உத்தரவு தந்த பிறகே, தாம் அறிக்கை வெளியிட்டதாக அந்தத் துறையின் செயலாளர் டி. என். கௌல், மொரார்ஜி தேசாயிடம் அறிவித்துவிட்டார்.

இதற்கிடையில், இந்தப் பிரச்சினையில் இந்திரா காந்தியை வம்புக்கு இழுக்க, நாடாளுமன்றத்தில் உள்ள மொரார்ஜியின் ஆதரவாளர்கள் கச்சை கட்டிக் கொண்டிருக்கிருர்களாம்!

புதுடில்லியிலுள்ள சில முக்கியமான வெளிநாட்டுத் தூதுவரகங்கள், நிதியமைச்சரின் சொற்பொழிவுகளையும், அவற்றை மறுத்து வெளிநாட்டுத் துறை வெளியிட்டுள்ள அறிக்கையையும் பார்க்க விரும்புவதாக இந்திய அரசுக்கு எழுதியுள்ளது, காங்கிரசுத் தலைவர்களை மேலும் சங்கடத்தில் ஆழ்த்தியுள்ளது!

தண்ணீர் பிரச்சினையைத் தீர்க்கும் அமெரிக்க முயற்சி

சென்னையில் கண்காட்சி--முதலமைச்சர் அண்ணா துவக்கிவைத்தார்

சென்னை, அக். 24—
தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் 'நீர்வளம் காணும் முயற்சி' என்னும் கண்காட்சியை நேற்று துவக்கிவைத்தார்; ஒரு முக்கியமான துறையில் — நீர்வளம் தேடும் முயற்சியில் உலகுக்கு உதவி செய்ய முன்வந்து, அமெரிக்கா வழிகாட்டுவதை அவர் பாராட்டினார்.

"அமெரிக்கா தனது செல்வத்தைப் பல வழிகளில் வளர்ந்து வரும் நாடுகளோடு பகிர்ந்து கொண்டுள்ளது; இந்நாடுகளுடன் தனதுநுண்ணறிவையும், வளங்களையும் பகிர்ந்து கொள்ளும் அமெரிக்க ஆர்வத்துக்கு மற்றொரு ஒளிமயமான உதாரணம் இந்தக் கண்காட்சி" என்று முதலமைச்சர் கூறினார்.

துவக்க விழா, இராஜாஜி மன்றத்தில் நடைபெற்றது; "வாஷிங்டன் நகரில் மே மாதத்தில் நடைபெற்ற 'அமைதிப் பணிக்குத் தண்ணீர்' என்ற மாநாட்டில் 'உலகின் நீர்வளம் காணும் முயற்சிக்கு அமெரிக்கா ஆதரவளிக்கும்' என்று குடியரசுத் தலைவர் ஜான்சன் அளித்த உறுதிமொழியை இந்தக் கண்காட்சி எடுத்துக் காட்டுகிறது" என்று அண்ணா குறிப்பிட்டார்.

சென்னையிலுள்ள அமெரிக்கத் துணைத் தூதுவர் டாக்டர் ஆல்பர்ட் பி. பிராங்க்ளின், விழாவுக்குத் தலைமை தாங்கினார்.

அமெரிக்கத் தகவல் நிலைய (யு.எஸ்.ஐ எஸ்.) இயக்குநர் பால் கே. மாரிஸ் வந்திருந்த பெருமக்களை வரவேற்றுப் பேசினார்.

வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி உள்பட இந்திய—அமெரிக்க உணவுத் துறை அதிகாரிகளும், ஊட்டச் சத்து நிபுணர்களும, விவசாயிகளும், விவசாயம் சம்பந்தமான தொழில்களின் பிரதிநிதிகளும் வந்திருந்தனர்.

வளர்ந்துவரும் பொருளாதாரத்தில் தண்ணீர் எவ்வளவு இன்றியமையாதது என்று அண்ணா அவர்கள் எடுத்துரைக்கையில், சென்னை நகருக்குத் தண்ணீர் வழங்குவது பற்றிக் குறிப்பிட்டதாவது:—

"ஆரம்பத்தில் சுமார் 8 இலட்சம் மக்களுக்குத் தண்ணீர் வழங்குவதற்காக அமைக்கப்பட்ட ஒரு ஏற்பாட்டைக் கொண்டே இன்று நகரம் தனது தண்ணீர்த் தேவையைச் சமாளித்து வருகிறது.

"நகருக்கே தண்ணீர் போதாமலிருப்பதால் புதிய தொழில்களின் வளர்ச்சி தடைபடுகிறது; இதனால் வேலை வாய்ப்புக்களுக்கும் உற்பத்திப் பெருக்கத்துக்கும் இடைஞ்சல் ஏற்பட்டுள்ளது. ஒரு நகரத்திற்கே நிலைமை இப்படியென்றால், உலகம் முழுவதற்கும் இந்தப் பிரச்சினை எவ்வளவு கடுமையானதாக இருக்கவேண்டும்?

வளர்ந்துவரும் தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க இந்தக் கண்காட்சி புதிய கருத்துக்களையும், புதிய வழிகளையும் தோற்றுவிக்கும் என்று நம்புகிறேன்.

டாக்டர் பிராங்க்ளின் தமிழில் பேசுகையில், "தண்ணீரைப் பொறுத்தவரையில், எல்லா நாடுகளுமே 'இல்லா' நாடுகள்தாம் என்று குறிப்பிட்டார்.

அனைவருமே சகோதரர்களாக நடந்துகொண்டு, உலகின் இன்றியமையாத அடிப்படை வளமான தண்ணீரை நியாயமாகவும், பயனுள்ள முறையிலும் பகிர்ந்து கொள்வதன் அவசர அவசியம் பற்றி அமெரிக்கத் துணைத் தூதுவர் வலியுறுத்தினார்.

"நீர்வளம் பற்றிய இந்த அறைகூவலை வெல்வதில் அமெரிக்கா ஐரோப்பா ஆகியவற்றின் தொழில் நுட்பமும், ஆசியாவின் அறிவும் தத்துவமும், நாட்டு வேற்றுமை ஏதுமின்றி எல்லாக் காலத்திலும் கிடைத்த அனுபவமும், வருங்காலத்தில் ஒருங்கு பயன்படுத்தப்படவேண்டும்" என்று அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்கத் தகவல் நிலையம் ஏற்பாடு செய்துள்ள இந்தக் கண்காட்சி 40 காட்சிப் பலகைகள் கொண்டது. உப்புத் தண்ணீரை நல்ல தண்ணீராக்குதல் — நீர் அழுக்காவதைக் கட்டுப்படுத்தல் —பாசனம்—புனல் மின்விசைத் திட்டங்கள் — பொழுதுபோக்கு முதலிய நீர்வளத் துறை பற்றிய பல்வேறு பிரிவுகளையும் காட்சியில் பார்க்கலாம்.

'நீர்வளம் காணும் முயற்சி' கண்காட்சியை, 29-ம் நாள் முடிய பொதுமக்கள் கண்டுகளிக்கலாம்.

காணவேண்டிய நேரம்—சனி, ஞாயிறுகளில் காலை 10 மணி முதல் மாலை 7-30 மணிவரையும்; மற்ற கிழமைகளில் மாலை 2 மணி முதல் 7-30 மணிவரையு ாகும்.

பஸ் கட்டும் தொ[torn]லாளரை ஊக்குவி[torn]வடிக்கை

பூரிப்பு ஊதியம் உயர்வு—அமைச்சர் அறிவிப்பு

சென்னை, அக். 23—
"குரோம்பேட்டையில் உள்ள தமிழக அரசின் பஸ் கட்டும் தொழிற்சாலையைச் சேர்ந்த தொழிலாளர் அனைவருக்கும் (டயா புதுப்பிக்கும் பிரிவு உட்பட) கன்னியாகுமரியில் உள்ள தொழிற்சாலைத் தொழிலாளருக்கும் அடிப்படை ஊதியத்தில் 40 சதவிகிதம் ஊக்குவிப்புப் பூரிப் பூதியமாகக் (போனஸ்) வழங்கப்படும்"

என்று பொதுப் பணித் துறையமைச்சர் திரு. கருணாநிதி இன்று தெரிவித்தார்.

"சென்ற ஆண்டு ஊக்குவிப்புப் பூரிப்பூதியம் 20.5 சதவிகிதம் அளிககப்பட்டது; போனஸ் ஆண்டான 1966 அக்டோபர் முதல் 1967 செப்டம்பர் வரையுள்ள காலத்தில்தான் உற்பத்தி அதிகரித்துள்ளபோதிலும், இவ்வாண்டு ஊக்க போனஸ் 40 சதவிகிதமாக உயர்த்தப்பட்டுள்ளது" என்றார்.

"பஸ் பராமரிப்பு டிப்போக்களைச் சேர்ந்த தொழில் நுட்பத் தொழிலாளர்கட்கு உயர்ந்த அளவாக 15 சதவிகிதம் ஊக்குவிப்புப் பூரிப்பூதியம் தரப்படும்; சென்ற ஆண்டு இது 10 சதவிகிதமாக இருந்தது" என்றார்.

தமிழக வரலாற்றுக்கு உதவும் விரக்கற்கள்

தொல்பொருள் துறையினர் கண்டுபிடிப்பு

சென்னை, அக். 24—
தமிழக வரலாற்றை உருவாக்குவதற்குப் பயன்படக்கூடிய இரு வீரக்கற்களைத் தமிழக அரசின் தொல்பொருள் துறையினர் கண்டுபிடித்துள்ளனர்.

இத்தகவலைத் தெரிவித்த தமிழக அரசு—தொல்பொருள் துறை இயக்குநர் திரு. இரா. நாகசாமி அவர்கள், இதுபற்றி மேலும் விளக்கியதாவது:—

"தர்மபுரி மாவட்டம் அரூர் வட்டம் இருளம்பட்டி என்ற சிற்றூரில் இரண்டு வீரக்கற்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

4—5-ஆம் நூற்றுண்டைச் சேர்ந்த தமிழ் எழுத்தும் வட்டெழுத்தும் கலந்து அதில் பொறிக்கப்பட்டுள்ளது. மாரவர்மன் காலத்தில் ஒன்றும், விண்ணவர்மன் காலத்தில் ஒன்றும் பொறிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

'தமிழக வரலாற்றின் இருண்ட காலம்' என்று சொல்லப்படும் 4—5-ஆம் நூற்றுண்டைய வரலாற்றை உருவாக்க இக்கற்கள் உதவியாக இருக்கும்.

சங்க இலக்கியத்தில் அதியன் மான் விண்ணன் என்ற அரசனைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது."

இந்த இரு வீரக்கற்களையும் கண்டுபிடிக்க, தமிழகத் தொல்பொருள் துறைக்குத் தகவல் தந்து உதவியவர் குறிஞ்சுப்பட்டித் தமிழாசிரியர் திரு. வி. பி. வெங்கட்ராமன் என்பவர் ஆவார்.

உலகத் தமிழ் மாநாடு

வரலாற்றுக் காட்சிகளுடன் ஊர்வல ஏற்பாடு

சென்னை, அக். 19—
இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் தொடக்க விழாவின் போது வரலாற்றுக் காட்சிகள் அமையப்பெற்ற ஊர்வலம் நடத்த திரைப்படத் தயாரிப்பாளர் எஸ். எஸ். வாசன் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

மாநாட்டுச் செயற்குழுவின் தலைவரான தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களும், தொழிலமைச்சர் இரா நெடுஞ்செழியன் அவர்களும், திரைப்படத் தயாரிப்பாளர்கள்—ஓவியர்கள் ஆகியோரைச் சந்தித்துப் பேசினர்.

இச்சந்திப்பு சட்டமன்ற உறுப்பினர்கள் பழைய விடுதியில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், திரு. எஸ். எஸ். வாசன் தலைமையிலான குழு அமைக்கப்பட்டது.

இக்கூட்டம் முடிந்தபின், அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், செய்தியாளர்களிடம் கூறியதாவது:—

"திரைப்படத் தொழில் துறையினர் இக்காட்சியை நடத்த முழு ஒத்துழைப்பையும் நல்குவதாக உறுதியளித்துள்ளனர்.

அரசியல் -- பொருளியல் -- பண்பாட்டியல் ஆகியவற்றில், ஒவ்வொரு காலத்திலும் தமிழர்கள் பெற்றிருந்த ஏற்றத்தை எடுத்துக் காட்டும் வகையில் மற்றொரு கண்காட்சி நடத்தப்படும்.

இதனை நடத்தும் குழுவிற்கு திரு. சா. கணேசன் தலைவராக இருப்பார்,

இக்காட்சியினைச் சிறப்பாக நடத்தும் வகையில் பல அமைப்புக்கள் தாமாகவே பங்குகொள்ள முன்வந்திருக்கின்றன."

குருஷ்சேவுக்குப் 'புற்று' நோய்!

முன்னாள் சோவியத் தலைமை யமைச்சர் நிகிதா குருஷ்சேவ், கல்லீரல் புற்று நோயினால் வருந்துவதாகத் தெரிகிறது.

அவருக்கு இப்போது லெனின் கிராடு மருத்துவமனையில் சிகிச்சையளிக்கப்படுகிறது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தென் சென்னை வண்டி தொழிலாளர் சங்கம்

மாறனுக்கு ஆதரவளிக்க வேண்டுகோள்

தென் சென்னை டிரக்—மாட்டு வண்டித் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் பொது உறுப்பினர் கூட்டம் 17—10—67 அன்று நடைபெற்றது; அதுபோது, 'நாடாளுமன்ற இடைத் தேர்தலில் கழக வேட்பாளர் முரசொலி மாறன் எம்.ஏ. அவர்களை ஆதரித்து வெற்றி தேடித் தரவேண்டும்' என்று சங்க உறுப்பினர்களையும், தொழிலாளர்களையும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

சீரணித் தொண்டர்கள் சீரிய பணி!

மாண்புமிகு தமிழகக் கல்வி அமைச்சர் அவர்களின் ஆணைக்கு இணங்க, 2—10—67 காந்தி பிறந்த நாளன்று, திருச்சி மாவட்ட சீரணிப் படையைச் சேர்ந்தவரும் காட்டூர் தி.மு. கழகப் பொருளாளருமான மா. வடிவேலு அவர்களால், இங்குள்ள அரிசன உயர் நிலைத் துவக்கப் பள்ளியில் தேசியக் கொடி ஏற்றிவைத்து குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

அத்துடன், தோழர் மா. வடிவேலு தலைமையில் கழகத் தோழர்களும், பொதுமக்களும் சேர்ந்து காட்டூரில் 200 கெஜ தூரம் சாலையைச் சீரமைத்துச் செப்பனிட்டார்கள்.

சென்னை 91-வது வட்ட மஜீத் நினைவு மன்றம்

சென்னை 91-வது வட்டத்தில் உள்ள ஆசாத் நகரில் 1—10—67 அன்று வட்டச் செயலாளர் செ. மோகனப்பா தலைமையில், நெல்லிக்குப்பம் மஜீத் நினைவு மன்ற அமைப்புக் கூட்டம் நடைபெற்றது; அதுபோது தேர்ந்தெடுக்கப்பட்டோர் :—

தலைவர்: கே. முகம்மது அனீபா; செயலாளர் : கே. எம். முகம்மது தாகீர்; துணைச் செயலாளர் : வி. வீரபத்திரன்; பொருளாளர் : பி. எம். பீர்முகம்மது; மற்றும் 5 செயற்குழு உறுப்பினர்கள்.

விவசாய உழவா? அரசியல் உழவா?

'கருத்திருமனுக்கு என்ன தெரியும்?'

எனக் கேட்டார் ஜெகஜீவன்ராம்

'பதவி கிடைத்தால் புத்தி இப்படியா கெட்டுவிடும்' எனக் கூறுகிறார் கருத்திருமன்

'உணவு உற்பத்தி' பற்றி இரு காங்கிரசுக்காரர்களின் 'கருத்தொரு'மித்த போக்கு!

வேலூர், அக். 22—
வேலூர் கோட்டை மைதானத்தில் விவசாயிகளின் 2-வது நாள் மாநாடு நடந்தது; முன்னாள் அமைச்சர் ஓ. வி. அழகேசன் தலைமை வகித்தார்.

மாநாட்டில் திரு. கருத்திருமன் பேசுகையில் கூறியதாவது:—

"விவசாயிகளின் குறைகளைக் காங்கிரசு ஆட்சி இருக்கும் போதே நான் (கருத்திருமன்) பல தடவைகள் எடுத்துச் சொல்லி இருக்கிறேன். காங்கிரசு அரசாங்கம் விவசாயிகளுக்குப் பிரமாதமாக ஒன்றும் செய்துவிடவில்லை. விவசாயிகளின் பிரச்சினையைப் பூரணமாகக் கவனிக்கவில்லை.

'விவசாயிகளுக்குக் கொடுப்பது நியாயமான விலைதான்' என்று சொல்ல டெல்லியில் இருந்து ஒரு மந்திரி (ஜெகஜீவன்ராம்) வந்தார்! அவரைச் சொல்லவைத்தார்கள்! அங்கே 'ஜெய் கிசான்' என்று கோஷம் போடுகிறார்கள்—இங்கே விவசாயிகளின் தலையில் கைவைக்க ஆதரவு கொடுக்கிறார்! 'ஜெய் கிசான்' கோஷம் ஒரு கேடா?

'விலை கட்டுப்படியாகவில்லை; உயர்த்திக் கொடுங்கள்' என்றால், 'இல்லை; நியாயமான விலை தான்' என்று சொல்கிறார்கள்; இதற்கு டெல்லி உணவு மந்திரி வேறு ஆதரவு கொடுக்கிறார்!

'கொள்முதல் விலையை அதிகரிக்கவேண்டும்—என்று கருத்திருமன் சொல்கிறாரே' என்று ஜெகஜீவன்ராமிடம் கேட்டதற்கு, 'கருத்திருமனுக்கு என்ன தெரியும்? நானும் ஒரு விவசாயி தான்' என்று அவர் பதில் கூறியிருக்கிறார்; என்ன இவருக்குத் தெரியும்? ஒரு ஜெகஜீவன்ராம் இல்லை — ஆயிரம் ஜெகஜீவன்ராம் வந்தாலும் சரி—என்னிடம் நடக்காது! நான் விவசாயம் செய்து அரசாங்கத்துக்கு கொள்முதல் விலைக்கே அளந்து இருக்கிறேன்!

ஜெகஜீவன்ராமை சவால் விட்டுக் கேட்கிறேன்—'எங்கே; நீங்கள் சாகுபடி செய்து, அரசாங்கக் கொள்முதலுக்கு யோக்கியமாக அளந்த 'கோதுமைக் கணக்கை'க் காட்டுங்கள் பார்க்கலாம்'—என்று!

இவர் பெரிய விவசாயியாம்! இவரா பீகார் மாநிலத்தைச் சேர்ந்தவர்? எங்களுக்குத் தெரி

யாதா—பீகாரில் பொங்கி எழுகின்ற இலட்சணம்?

பீகாருக்கு அளந்து கொட்டியதால்தானே எங்களுக்கு (காங்கிரசுக்கு) இந்த நிலை வந்தது?— தேர்தலில் தோற்றோம்!

சிலருக்குப் பதவி கிடைத்தாலே இப்படித்தான் புத்தி கூடக் கெட்டுப்போகிறது!

தமிழகத்தை விட்டுப் போன பிறகு சொல்கிறார் — 'மாநில அரசு விரும்பினால் கொள்முதல் விலையைக் கூட்டிக் கொடுக்கலாம்' என்று! ஏன் இந்தத் திடீர் மாற்றம்? அப்படியானால் இவருக்கு இரட்டை நாக்குதானே?"

சனநாயகப் பாதுகாப்பு மாநாடு

சென்னை நகர மாணவர்கள் ஏற்பாடு

சென்னை, அக். 23—
சென்னையில், 'சனநாயகப் பாதுகாப்பு மாநாடு' என் [torn] பெயரில் சிறப்புமிக்க [torn]டு ஒன்[torn]ன் நடத்திடும் முயற்சியில் [torn]நகரத்து மாணவம[torn]ள் தீவிரமாக முனைந்துள்ளனர்.

29—10—67 [torn]ன்று தேனும்பேட்டை ஆபட[torn]ரி மாளிகையில் இந்த மாநாடு[torn]பெறும்

மாநாட்டையொட்டி [torn] அன்று சிறப்புமிக்க ஊர்[torn] ஒன்றும் நடைபெறவிருக்கி[torn]

மாநாடு வெற்றிகர[torn]க நடைபெறத் திட்டம் வகு[torn]தற்காக, திரு. எல். கணேச[torn] தலைமையில் ஒரு கூட்டம் நடை[torn]பற்றது.

பல்வேறு கல்லூரி[torn]களையும் சேர்ந்த மாணவப் பி[torn]திநிதிகள் அடங்கிய குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் வெளியூர்களிலிருந்தும் ஏராளமான மாணவர்கள் பங்கு செ[torn]கிறார்கள்.

சென்னை 48-வதுவட்ட திரு.வி.க மறுமலர்ச்சி மன்றம்

3—10—67-ல் நடைபெற்ற மேற்படி மன்றப் பொது உறுப்பினர் கூட்டத்தில் கீழ்க்கண்டவாறு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— அவைத் தலைவர் : கே. ஏ. இரங்கையா; செயலாளர்: ந. கோவிந்தன்; துணைச்செயலாளர்: அ. இலட்சுமிபதி; பொருளாளர்: வ. அருணசலம்; இரவுப் பள்ளி பொறுப்பாளர்: மு. முனுசாமி.

'ஜபல்பூர் சலோ!'

இந்தக் கிழமை இறுதி நாட்களில், இந்தியத் துணைக் கண்டத்தின் முதல் பெரும் கட்சியான காங்கிரசு, ஜபல்பூரில் கூடுகிறது!

32 ஆண்டுக்கால இடைவெளிக்குப்பின்—அதாவது 1935-க்குப்பின்—இப்போது இரண்டாவது முறையாக, மத்தியப் பிரதேசத்தின் இந்த நகரில் அனைத்திந்தியக் காங்கிரசு கூடுகிறது!

நாளிதழ் ஒன்று குறிப்பிட்டிருப்பதுபோல், 32 ஆண்டுக் காலம்—அதுவும் அரசியலில்—ஒரு தலைமுறைக்கும் குறைவான பகுதியே எனினும்—காங்கிரசுக் கட்சி, இந்த இடைப்பட்ட ஆண்டுகளில், 'பல தலைமுறையினரை' என்று குறிப்பிட முடியாவிட்டாலும் பல தரத்தினரை இழந்துவிட்டிருக்கிறது!

'சுதந்தரத்துக்கு முன்னும் பின்னும்' என்று 1935-யும் 1967-யும் பிரிப்பது போலவே, காங்கிரசுக் கட்சியைக்கூட, 'இப்போதும்—அப்போதும்—இடையிலும்' என, பல வகையாகப் பிரிக்கலாம்!

சீன அச்சுறுத்தலைப்போல், இந்தி வெறியினை அவ்வப்போது சுடுநெருப்பாகக் கக்கிக்கொண்டிருக்கும் சேத் கோவிந்த தாஸ், அப்போதைய ஜபல்பூர் மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவர்!

ஆனால், அப்போது அவருடன் கட்சியிலிருந்தவர்கள் பலர், இப்போது வேறு அமைப்புக்களில் இருக்கின்றனர்; அன்று அவருடன் வாழ்ந்தவர்கள் சிலர், இன்று உயிருடன் இல்லை!

அன்று ஜபல்பூர் மாநாட்டில் கலந்துகொண்ட இராஜாஜி, ஆச்சார்ய கிருபளானி போன்றவர்கள், இன்று, காங்கிரசின் எதிர் முகாம்களில் இருக்கின்றனர்!

இராசேந்திர பிரசாத், வல்லபாய் படேல், பந்த், சரோஜினி நாயுடு, பட்டாபி சீதாராமய்யா, மௌலானா ஆசாத், சத்தியமூர்த்தி போன்றவர்கள், காங்கிரசின் கடந்துபோன தலைமுறையினராகிவிட்டனர்!

சுதந்தரத்துக்காக அன்று மக்கள், எப்படிக் காங்கிரசின் பின்னால் திரண்டெழுந்திருந்தார்களோ, அவ்வாறே, காங்கிரசின் அமைப்புக்குள்ளேயே சக்திமிக்க இளைஞர் அணி, சோஷலிசக் கருத்துக்களையும் பரப்பிவந்தது!

ஜபல்பூருக்கும் அடுத்த ஆண்டு மாநாட்டில்தான், காங்கிரசு, தனது அடிப்படைப் பொருளாதாரக் கொள்கையாக சோஷலிசத்தைத் தேர்ந்தெடுத்தது!

இப்போது மீண்டும் ஜபல்பூரில் இரண்டாவது முறையாகக் கூடப்போகும் காங்கிரசு மாநாட்டில் தோன்றியுள்ள மாற்றத்தைக் கணக்கெடுப்பது போலவே, 'தங்கள் கட்சி எப்படியெப்படி எல்லாம் மாறியுள்ளது' எனபதனையும் சிந்தித்துப் பார்ப்பது நல்லது!

★ மொழித்துறையில் ஒரு முடிவுக்கு வர முடியாத நிலை!

★ பெட்டிக்குப் போய்த் திரும்பிக்கொண்டிருக்கும் சோஷலிசத் திட்டங்கள்!

★ நாட்டை—மக்களை மறந்த கட்சிச் சண்டைகள்! கோஷ்டிப் பிளவுகள்!

★ இந்தியாவின் பாதி மாநிலங்களுக்கும் குறைவான ஆட்சிப் பொறுப்பு!

★ 'நிரந்தரமாகிவிடுமோ' என்று ஐயுறத்தக்க நிலையில் உள்ள அந்நிய ஆக்கிரமிப்பு!

★ வெகுவாக அதிகரித்துவரும் வெளிநாட்டுக் கடன்கள்!

★ சரிந்துவரும் உள்நாட்டுப் பொருளாதாரம்!

★ குறைந்துவரும் நாணய மதிப்பு!

★ உடன்பிறந்த வியாதியைப் போன்ற காஷ்மீர் பிரச்சினை!

★ உலக அரங்கில் சந்தேகத்துக்கும், சர்ச்சைகளுக்கும் ஆளாகியிருக்கும் வெளிநாட்டுக் கொள்கை!

இருபதாண்டுக் காலம் இந்தியா முழுவதையும் ஆண்டவர்கள் என்பதோடு, 'இப்போதும் மத்திய அரசில் இருப்பவர்கள்' என்ற முறையில் ஜபல்பூரில் கூடப்போகிறவர்கள், இதற்கெல்லாம் விளக்கம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள்!

—எஸ். ஆர்.

'சுயநலமிகள் தூண்டுதலுக்கு இரையாக வேண்டாம்'

'நேரடி நடவடிக்கையிலிறங்கி நல்லாதரவை இழக்காதீர்கள்'

ஆசிரியர் சங்கச் செயற்குழுவினர் அறிவுறுத்தல்

"முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களின் ஆட்சி, ஆசிரியர் அனைவருக்கும் நம்பிக்கை ஒளி காட்டுகிறது! அவ்வொளி, அவர்தம் வாழ்வின் இருளைத் துடைத்து, நன்மைகள் பல நல்கிடும் என உறுதியுடன் உளமார நம்புகிறார்கள்!

"இதனை உணராமல், ஒருசிலரின் தூண்டுதலின்பேரில்—சென்னை நகர ஆசிரியர் சங்கத்தின் அனுமதியையும் பெறாமல்—விடாப்பிடியாக நேரடி நடவடிக்கையைத் தொடர்ந்து நடத்துவார்களேயானால், அவர்கள் ஆசிரியர் பெரும்பாலோரின் ஆதரவை இழப்பார்களென்பது திண்ணம். மேலும், அரசினர் ஆசிரியர்களுக்குச் செய்ய நினைக்கும் நன்மைகளை—வசதிகளை இந்த ஆசிரியர் சங்கத்தினரே தாங்கள் மேற்கொண்டுள்ள விடாப்பிடியான நடவடிக்கையின் மூலம் கெடுத்துவிடுவார்களோவென ஆசிரியர் பலர் அஞ்சுகின்றனர்!

"ஆதலின், 'ஆசிரியர்களுக்கு உண்மையில் நன்மை செய்யவேண்டும் என்ற நாட்டம் ஆசிரியர் சங்கத்திற்கு இருக்குமேயானால், உடனே அவர்கள் தங்கள் நேரடி நடவடிக்கையைக் கைவிடுவார்களாக!"

என்று, சென்னை ஆசிரியர் சங்கச் செயற்குழு உறுப்பினர்கள் விடுத்துள்ள அறிக்கையில் அறிவுறுத்தியுள்ளனர்; அவ்வறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது :—

"அரசு உதவிபெறும் பள்ளிகளில் பணிபுரியும் [illegible]ரியர்களுக்கு நகர ஈட்டு[illegible] தர வேண்டுமென [illegible] முதலமைச்சரை [illegible] ஆசிரியர் சங்கங்களை[illegible]ர்ந்த பிரதிநிதிகள் சந்தித்தபோது, அவர் தந்த உறுதிமொழி, மனநிறைவு அளிப்பதாக உள்ளது.

இந்நிலையில், சென்னை ஆசிரியர் சங்கம் நேரடி நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பது சிறிதும் தேவையற்றது.

இருபதாண்டுக் காலமாகப் பொறுமையாக இருந்த ஆசிரியர் சமுதாயம்—பதவி ஏற்றுச் சில மாதங்களே ஆகியுள்ள தமிழக அரசினர், அரசு ஊழியர்களுக்குக் கொடுத்ததுபோலவே நமக்கும் கிராக்கிப் படி உயர்வு கொடுத்துள்ளனர் — அதற்கு நன்றி தெரிவிக்காதது வருந்தத்தக்கதாகும்.

மேலும், அரசுக்குப் போதிய அவகாசம் அளிக்காமல் நகர ஈட்டுப் படி, வீட்டு வாடகைப் படி கோரிக்கைகளை வலியுறுத்த உடனடி நேரடி நடவடிக்கையில் இறங்கியிருப்பது இரங்கத்தக்கது—வருந்தத்தக்கது—வன்மையாகக் கண்டிக்கத்தக்கது."

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

26--10--67

சிபாதநல்லூர்

தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு; தலைவர்: எஸ். எம். நித்தியானந்தம்; பேசுவோர்: ஜி. நடராசன் எம்.எல்.ஏ., எம். கே. ஏழுமலை, வேலம் தம்பிதாசன், பி. கே. முனுசாமி, எல். பாலகிருட்டினன், டி. ஏ. திருவேங்கடம், பொன்னரசன், பொன்னுதுரை, இரா. நடேசன்.

குறிஞ்சிப்பாடி

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு மாரியம்மன் கோயில் திடலில்; அமைச்சர், மற்றும் நாடாளுமன்ற—சட்டமன்ற உறுப்பினர்கட்குப் பாராட்டு; தலைவர்: அ. த. சுப்பிரமணியன்; பாராட்டுப் பெறுவோர்: அமைச்சர் ஏ. கோவிந்தசாமி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ். கே. சம்பந்தம் பி.ஏ., வெ. கிருஷ்ணமூர்த்தி, எம்.ஏ.பி.எல்., வி. மாயவன் பி.ஏ.,பி.டி.,பி.எல்., சட்டமன்ற உறுப்பினர்கள் இரா. இளம்வழுதி எம்.ஏ.,பி.எல்., எஸ். இராமசந்திரன் பி.எஸ்சி., பி.ஈ., என். இராசாங்கம்; பாராட்டுவோர்: தில்லைவில்லாளன் எம்.ஏ.,பி.எல்., இரெ. சாம்பசிவம், ஏ. வி. தண்டபாணி, எம். செல்வராசு.

சென்னை 91-வது வட்டம்

அழகிரி மன்றச் சார்பில் மாலை 6-30 மணிக்கு மைனர் டிரஸ்டு புரத்தில்; தலைவர்: சி. வி. சிட்டி பாபு; பேசுவோர்; அமைச்சர் மாதவன், [illegible] மா. செங்குட்டுவன், து. புரு[illegible]த்தமன், செ. மோகனப்பா, [illegible]தாபதி, வி. சந்தான கோ[illegible]ற்றும் பலர். (மணி [illegible]—பத்மினி குழுவின[illegible] புயலுக்குப்பின் என்ற கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

27--10--67

பெங்களூர்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு விசுவேசுவரய்யா உயர்நிலைப் பள்ளித் திடலில்; தலைவர்: இரா. உதயணன்; பேசுவோர்: தா. கிருட்டினன் எம்.ஏ., எம்.பி., எம். வேணுகோபால், கி. சோழன், எஸ். என். நாராயணன்.

மாநில வீட்டு வசதிக் கழகம்

(திட்டமிடுதல் மற்றும் மேம்பாட்டுப் பிரிவு)

ஒப்பந்த அறிவிப்பு

Ref 46925/Dev. 11/67

வேலையின் பெயரும், ஒப்பந்ததாரரின் பெயரும் உறையின் மேலே எழுதப்பட்டு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள். 23—11—1967 மாலை 3 மணிக்குள் கீழே கையொப்பமிட்டுள்ளவரிடம் வந்து சேருமாறு வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 4 மணிக்கு நேரில் இருக்க விரும்பும் ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் உடைத்துப் பார்க்கப்படும்.

வேலையின் பெயர் :

மேற்குச் சென்னை புறநகர்த் திட்டம் பாட்ச்-I பகுதியில் பிளாட் எண் 205—222 மற்றும் கடைகளுக்கும் பெட்ரோல் பங்குக்கும் ஒதுக்கப்பட்டுள்ள பகுதியில் பள்ளமாக இருக்கும் பிளாட்டுகளைத் தூர்த்தல்.

வேலையின் குத்து மதிப்பீடு	ரூ. 63,940
பொறுப்புத் தொகை	ரூ. 960
ஒப்பந்த முறை	L. S.
ஒப்பந்த நமூனுக்கள் விலை	ரூ. 10+ விற்பனை வரி

(திரும்பப்பெற முடியாதது)

ஒப்பந்த நமூனு முதலானவற்றை 6—11—1967 அன்றோ அதற்குப் பிறகோ வேலை நாட்களில் காலை 11 மணி முதல் பிற்பகல் 2 மணிக்குள் பணம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
மாநில வீட்டு வசதிக் கழகம்

36, மவுண்ட்ரோடு,
சென்னை-35
தேதி: 20—10—1967

காதால் கேட்டது!

ஒருவர்:—

"தமிழக அரசு போக்குவரத்தில் 'விரைவு வண்டி' என்று எழுதப்பட்டிருப்பதை, 'விறகு வண்டி' என்று பள்ளிப் பிள்ளைகள் படிப்பதாக முன்னர்—சிலநாள் அமைச்சராக இருந்த பூவராகன் சொல்லியிருக்கிறரே!"

மற்றொருவர்:—

"ஆமாம்; அவரது பெயரைக்கூட, பூ—வராகன் என்று பிரித்துப் படித்து பொருள் கொண்டு பார்த்தால், 'அசிங்கமாக இருக்கிறதே' என்று—அவருக்குத் தெரிந்த ஒருவர் என்னிடம் ஒருநாள் குறைப்பட்டுக்கொண்டார்!"

சட்டம்--அமைதி கெட்டது உண்மை என்றால்....

காங்கிரசாருக்கு அண்ணா தரும் பதில்

"'தமிழகத்தில் தி. மு. கழகம் ஆட்சிக்கு வந்ததால், சட்டம் போயிற்று--அமைதி போயிற்று' என்று காங்கிரசுக்காரர்கள் கூறுகிறார்கள்.

"சட்டம்—அமைதி பறிபோயிருந்தால், காங்கிரசுத் தலைவர்கள் வருகிறார்களே, பவனி—நடக்குமா?

"இப்படிக் கூட்டம் முடிந்து அனைவரும் வீடு போய்ச் சேர முடியுமா — காங்கிரசுக்காரர்கள் கூறுவதுபோல சட்டம் அமைதி கெட்டிருந்தால்!

"என்னுடை[illegible] கழகத்தைச் சார்ந்தவர்தான்—என் அன்பைப் பெற்றவர்தான்[illegible] காமராசரையே தோற்கடித்தவர்தான்—விருதுநகர் [illegible]வாசன்! தொழிலாளர் போராட்டத்தில் ஈடுபட்டு—அ[illegible]துமீறி ஓர் இடத்துக்குச் சென்றார் என்பதற்காக அவ[illegible]ய கைது செய்தோம்!

"மறு[illegible] அவர் வெளியே வந்தார்; வழக்குகூடப் பதிவாகியது; [illegible]தாரம் இல்லாத காரணத்தால் அது தள்ளுபடி செய்யப்பட[illegible]!

"சீனி[illegible]சன் சென்னைக்கு வந்து என்னைப் பார்த்தபோதே, 'என்ன[illegible]பா, கோபமா?' என்று கேட்டேன்; அதற்கு அவர், 'இப்[illegible]துதான் அண்ணா, எனக்குப் பெருமை' என்றார்!

"அ[illegible]மீறிச் சென்றால், அது சீனிவாசனே ஆனாலும் தொ[illegible]றது எங்கள் சட்டம்! காங்கிரசுக்காரர்கள் சொல்லுவதுபோல் சட்டம் கெட்டிருந்தால், சீனிவாசனா உள்ளே போக வேண்டும்?—அந்த முதலாளிகள் அல்லவா உள்ளே போயிருக்க வேண்டும்?"

(நுங்கம்பாக்கம் கூட்டத்தில்)

தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கும் நகர ஈட்டுப் படி

முதலமைச்சரிடம் கோரிக்கை

சென்னை, அக். 24—

தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் கூட்டணியின் சென்னைக் கிளைச் சார்பில் அதன தலைவர் அப்புக்குட்டி தலைமையில் ஒரு தூதுக்குழு, முதலமைச்சர் அண்ணா அவர்களைச் சந்தித்து, ஆசிரியர்களுக்கு நகர ஈட்டுப் படியும், வீட்டு வாடகையும் கொடுக்கவேண்டும் எனக் கேட்டுக் கொண்டது.

இந்தச் சந்திப்பின்போது, நடந்த பேச்சுவார்த்தைகளில் அமைச்சர் ஏ. கோவிந்தசாமி, க. அறிவழகன் எம்.எல்.சி., இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ., என். வி. நடராசன் எம்.எல்.சி., சட்டமன்றத் துணைத் தலைவர் புலவர் கோவிந்தன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

ஆசிரியர்களின் கோரிக்கைகளைக் கவனிப்பதாக அறிஞர் அண்ணா கூறினர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible] அச்சகத்தில் (24, [illegible] செட்டுத் தெரு, சென்னை [illegible]) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.